**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்.**
**முன்னிலை : திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ. பொ.), பல்லடம்**
(2024 ம் ஆண்டு மார்ச் மாதம் 22 ஆம் நாள் வெள்ளிக்கிழமை
திருவள்ளுவராண்டு 2055, சோபகிருது வருடம், பங்குனி 09 ம் நாள்)

**இ.ம.எண்.4/2021**
**in**
**அ.வ.எண்.2/2021**

1. N. சண்முகம்

... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. மாநகராஜ்
2. ஜோதிமணி
3. குமாரசாமி
4. பரிமளா
5. நாச்சிமுத்து கவுண்டர்
6. குட்டி (எ) காங்கேயப்பன் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.கிருஷ்ணவேணி B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், 1,2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.கோபாலகிருஷ்ணன்,B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், 3,4 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் திறந்த நீதிமன்றத்தால் அழைத்தும் ஆஜராகாததால் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும், 5 ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.ரவீந்திரன்,B.SC.,B.L., அவர்கள் ஆஜராகியும் , 6 ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் திரு.P.P.சுரேஷ்குமார், B.A., B.L., இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**<u>உத்தரவு</u>**

இம்மனுவில் கண்டுள்ளபடி தாவா சொத்தை அளவீடு செய்ய நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து தாலுகா சர்வேயர் உதவியுடன் தாவா சொத்தை அளந்து அறிக்கை மற்றும் அளவு வரைபடம் தாக்கல் செய்ய உத்தரவிடக்கோரி உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டம் கட்டளை 26 விதி 9 மற்றும் பிரிவு 151 ன் படி மனுதாரர்/ வாதியால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1) மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:-</u>**

i) இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கின் வாதியாவார். அசல் வழக்கை வாதி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்துக்கள் பல்லடம் கிராமம், புல எண்.55, 56, 93, 101, 102 மற்றும் 103 ல் ஆதியில் ஒரு பொங்கலியப்பனுக்கு பாத்தியப்பட்டிருந்து அவர் இறந்ததற்கு பின்னிட்டு அவரின் வாரிசுகளான முருகப்ப கவுண்டர், சுப்பைய கவுண்டர், குமாரசாமி கவுண்டர், நாச்சிமுத்து கவுண்டர், சின்னசாமி கவுண்டர், முருகசாமி கவுண்டர் மற்றும் நாச்சம்மாள் ஆகியோர் 27.04.1966 ல் பாகப்பிரிவினை செய்து கொண்டதில் ஏ அட்டவணை சொத்துக்கள் முருகப்ப கவுண்டருக்கும், நாச்சப்ப கவுண்டருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. பி அட்டவணை சொத்துக்கள் சுப்பைய கவுண்டருக்கும், முருகசாமி கவுண்டருக்கும் ஒதுக்கப்பட்டு பி1 அட்டவணை சொத்துக்கள் நஞ்சம்மாள் அனுபவம் செய்து வந்து அவர் இறப்புக்கு பின்னிட்டு சுப்பையா கவுண்டர், முருகசாமி கவுண்டர் அடையவும் சி அட்டடவணை சொத்துக்கள் குமாரசாமி கவுண்டருக்கும் அவரது மகன் சின்னசாமிக்கும் ஒதுக்கப்பட்டு சி1 அட்டவணை சொத்துக்களை நஞ்சம்மாள் இறக்கும்வரை அனுபவம் செய்து வரவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

ii) வாதி நாச்சிமுத்து கவுண்டரின் மகன். ஏ மற்றும் ஏ1 அட்டவணை சொத்துக்களைப் பொறுத்து 11.10.1994 அன்று நாச்சிமுத்து கவுண்டர் செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தி வைத்துள்ளார் என்றும், அந்த சொத்துக்களுக்கு வாதி தான் உரிமையாளர் அதைப் பொறுத்து 06.06.2021 அன்று விடுதலை ஆவணம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. 1 ம் பிரதிவாதிக்கு ஏக்கர் 0.93 ல் கிணற்றில் 1/3 பங்கும், போர்வெல்லில் 1/2 பங்கும், 3520 சதுரடி நிலமும் ஒதுக்கப்பட்டது, 2 ம் பிரதிவாதி புல எண்.102 ல் ஏக்கர் 0.32 ம் புல எண்.103/1 ல் ஏக்கர் 0.69 ம் கிரையம் பெற்றுள்ளார். பின்னிட்டு 2 ம் பிரதிவாதி 06.02.2019 அன்று அதைப் பொறுத்து 1 ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார். அதில் 1 ம் பிரதிவாதி வீடு கட்டியுள்ளார். கடந்த 01.10.2020 அன்று கல்லாம்பாளையத்தை சேர்ந்த ராமமூர்த்தி என்பவரின் உதவியுடன் பொதுப்பாதையின் நடுவே சுவர் வைக்கப்பட்டது.

iii) அந்த இடத்தில் தாவா பாதையின் அகலம் 8 அடி மட்டுமே உள்ளது. சுப்பைய கவுண்டர் மற்றும் குமாரசாமி கவுண்டர் நிலங்களின் வழியாக செல்லும் தென்வடல் வண்டிப்பாதையில் மனுதாரர்களுக்கு பாத்தியம் உள்ளது. அதன் பகுதியான கிழமேல் வண்டிப்பாதை க.ச.எண்.102 மற்றும் 103/1 ல் அமைந்துள்ளது. குமாரசாமியின் வாரிசுகளும் 2 ம் எதிர்மனுதாரரும் அந்த 14 அடி வண்டிப்பாதையை வாதி அனுபவம் செய்வதை இடையூறு செய்து வருகிறார்கள். 1956 பாகப்பிரிவினையின் அடிப்படையில் மனுதாரரின் தந்தைக்கு வடக்கு கிழக்கில் 50 அடியும், கிழக்கு மேற்கு மற்றும் தென்வடலில் 16 அடியும் ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் மனுதாரரின் தகப்பனார் வடக்கு பார்க்க வீடு கட்டி வசித்து வருகிறார்.

iv) கடந்த 06.02.2019 ல் 1ம் எதிர்மனுதாரரால் 2ம் எதிர்மனுதாரருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைக்கப்பட்டுள்ளது. பின்பு 1ம் எதிர்மனுதாரர் 2ம் எதிர்மனுதாரருக்கு 09.10.2020 ல் க.ச.எண்.103/1 ல் 0.48 சென்டை பொறுத்து செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளார். பின்னிட்டு 1, 2 எதிர்மனுதாரர்கள் அந்த சொத்தில் உள்ள கட்டிடத்தை இடித்துவிட்டு மனுதாரரின் தென்கிழக்கு சுவரை ஒட்டி த்தில் குழிப்பறிக்க முயற்சி செய்து வருகிறார்கள். அவ்வாறு குழி பறித்தால் மனுதாரரின் தென்புற சுவர் கீழே விழுந்துவிடும். 5, 6 எதிர்மனுதாரர்களுக்கு காலை எண்.102 ல் நடந்துகொள்ளும் பாத்தியம் மட்டுமே உள்ளது.

v) 6 எதிர்மனுதாரர்கள் 1, 2 எதிர்மனுதாரர்களுடன் சேர்ந்து மனுதாரருக்கு எதிராக இடையூறு செய்து வருகிறார்கள். எனவே தாவா சொத்தை எதிர்மனுதாரர்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்பதை தெளிவுபடுத்த இயற்கை அமைப்புகளை பார்வையிட்டு தாலுக்கா சர்வேயர் உதவியுடன் அளந்து அறிக்கை தாக்கல் செய்தால் தான் மனுதாரர் கோரியுள்ள செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் குறித்து உரிய முறையில் நீதிமன்றத்திற்கு தெளிவாக்க முடியும், எனவே இம்மனுவை அனுமதித்து உத்தரவிட வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது.

<u>**2. 5ம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர் உரை சுருக்கம்:-**</u>

i) மனுதாரர்களின் மனு பொய்யானது, சட்டப்படியாக நிலைக்கத்தக்கதல்ல. இம்மனுவில் இவ்வெதிர்மனுதாரர் வெளிப்படையாக ஒப்புக் கொள்ளும் சங்கதிகளைத் தவிர மற்ற சங்கதிகளை மனுதாரர்களே நிரூபணம் செய்ய வேண்டும்.

ii) இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கின் வாதியாவார் என்றும், அசல் வழக்கை வாதி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார் என்றும், தாவா சொத்துக்கள் பல்லடம் கிராமம், புல எண்.55, 56, 93, 101, 102 மற்றும் 103 ல் ஆதியில் ஒரு பொங்கலியப்பனுக்கு பாத்தியப்பட்டிருந்து அவர் இறந்ததற்கு பின்னிட்டு அவரின் வாரிசுகளான முருகப்ப கவுண்டர், சுப்பைய கவுண்டர், குமாரசாமி கவுண்டர், நாச்சிமுத்து கவுண்டர், சின்னசாமி கவுண்டர், முருகசாமி கவுண்டர் மற்றும் நாச்சம்மாள் ஆகியோர் 27.04.1966 ல் பாகப்பிரிவினை செய்து கொண்டதில் ஏ அட்டவணை சொத்துக்கள் முருகப்ப கவுண்டருக்கும், நாச்சப்ப கவுண்டருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும், பி அட்டவணை சொத்துக்கள் சுப்பைய கவுண்டருக்கும், முருகசாமி கவுண்டருக்கும் ஒதுக்கப்பட்டு பி1 அட்டவணை சொத்துக்கள் நஞ்சம்மாள் அனுபவம் செய்து வந்து அவர் இறப்புக்கு பின்னிட்டு சுப்பையா கவுண்டர், முருகசாமி கவுண்டர் அடையவும் சி அட்டடவணை சொத்துக்கள் குமாரசாமி கவுண்டருக்கும் அவரது மகன் சின்னசாமிக்கும் ஒதுக்கப்பட்டு சி1 அட்டவணை சொத்துக்களை நஞ்சம்மாள் இறக்கும்வரை அனுபவம் செய்து வரவும் ஒதுக்கப்பட்டுள்ளது என்று சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் உண்மையல்ல.

iii) மேலும் வாதி நாச்சிமுத்து கவுண்டரின் மகன் என்றும், ஏ மற்றும் ஏ 1 அட்டவணை சொத்துக்களைப் பொறுத்து 11.10.1994 அன்று நாச்சிமுத்து கவுண்டர் செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தி வைத்துள்ளார் என்றும், அந்த சொத்துக்களுக்கு வாதி தான் உரிமையாளர் அதைப் பொறுத்து 06.06.2021 அன்று விடுதலை ஆவணம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது என்றும், 1 ம் பிரதிவாதிக்கு ஏக்கர் 0.93 ல் கிணற்றில் 1/3 பங்கும், போர்வெல்லில் 1/2 பங்கும்,

3520 சதுரடி நிலமும் ஒதுக்கப்பட்டது, 2ம் பிரதிவாதி புல எண்.102ல் ஏக்கர் 0.32ம் புல எண்.103/1ல் ஏக்கர் 0.69ம் கிரையம் பெற்றுள்ளார் என்றும், பின்னிட்டு 2ம் பிரதிவாதி 06.02.2019 அன்று அதைப் பொறுத்து 1ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார். அதில் 1ம் பிரதிவாதி வீடு கட்டியுள்ளார் என்றும், கடந்த 01.10.2020 அன்று கல்லாம்பாளையத்தை சேர்ந்த ராமமூர்த்தி என்பவரின் உதவியுடன் பொதுப்பாதையின் நடுவே சுவர் வைக்கப்பட்டது என்றும், அந்த இடத்தில் தாவா பாதையின் அகலம் 8 அடி மட்டுமே உள்ளது என்றும், சுப்பைய கவுண்டர் மற்றும் குமாரசாமி கவுண்டர் நிலங்களின் வழியாக செல்லும் தென்வடல் வண்டிப்பாதையில் மனுதாரர்களுக்கு பாத்தியம் உள்ளது என்றும், அதன் பகுதியான கிழமேல் வண்டிப்பாதை க.ச.எண்.102 மற்றும் 103/1ல் அமைந்துள்ளது என்றும், குமாரசாமியின் வாரிசுகளும் 2ம் எதிர்மனுதாரரும் அந்த 14 அடி வண்டிப்பாதையை வாதி அனுபவம் செய்வதை இடையூறு செய்து வருகிறார்கள் என்று சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் உண்மையல்ல.

iv) இவ்வெதிர்மனுதாரருக்கு க.ச.எண்.102ல் உள்ள கிணற்றில் 1/2 பாகமும், தாவா 2வது அயிட்ட சொத்தான பொது வண்டித்தடத்தில் தடபாத்தியமும் உள்ளது என்பது உண்மை என்றும், இவ்வெதிர்மனுதாரரின் மருமகன் தான் 6ம் எதிர்மனுதாரர் என்றும், இவ்வெதிர்மனுதாரர் வாதி மற்றும் பிரதிவாதிகளின் பக்கத்து நிலக்காரர் என்றும், இவ்வெதிர்மனுதாரர்களுக்கு க.ச.எண்.102ல் உள்ள கிணற்றில் 1/2 பங்கு உள்ளது என்றும், இந்த வழக்கிற்கும் இவ்வெதிர்மனுதாரருக்கும் சம்பந்தம் இல்லை என்றும், எனவே இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்பதே எதிர் உரையின் சுருக்கமாகும். 1, 2 மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவிற்கு ஆட்சேபனை இல்லை என்று சொல்லப்பட்டுள்ளது.

**3) 6 ம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர் உரை சுருக்கம்:-**

i) மனுதாரர்களின் மனு பொய்யானது, சட்டப்படியாக நிலைக்கத்தக்கதல்ல. இம்மனுவில் இவ்வெதிர்மனுதாரர் வெளிப்படையாக ஒப்புக் கொள்ளும் சங்கதிகளைத் தவிர மற்ற சங்கதிகளை மனுதாரர்களே நிரூபணம் செய்ய வேண்டும்.

ii) இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கின் வாதியாவார் என்றும், அசல் வழக்கை வாதி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார் என்றும், தாவா சொத்துக்கள் பல்லடம் கிராமம், புல எண்.55, 56, 93, 101, 102 மற்றும் 103ல் ஆதியில் ஒரு பொங்கலியப்பனுக்கு பாத்தியப்பட்டிருந்து அவர் இறந்ததற்கு பின்னிட்டு அவரின் வாரிசுகளான முருகப்ப கவுண்டர், சுப்பைய கவுண்டர், குமாரசாமி கவுண்டர், நாச்சிமுத்து கவுண்டர், சின்னசாமி கவுண்டர், முருகசாமி கவுண்டர் மற்றும் நாச்சம்மாள் ஆகியோர் 27.04.1966ல் பாகப்பிரிவினை செய்து கொண்டதில் ஏ அட்டவணை சொத்துக்கள் முருகப்ப கவுண்டருக்கும், நாச்சப்ப கவுண்டருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும், பி அட்டவணை சொத்துக்கள் சுப்பைய கவுண்டருக்கும், முருகசாமி கவுண்டருக்கும் ஒதுக்கப்பட்டு பி1 அட்டவணை சொத்துக்கள் நஞ்சம்மாள் அனுபவம் செய்து வந்து அவர் இறப்புக்கு பின்னிட்டு சுப்பையா கவுண்டர், முருகசாமி கவுண்டர் அடையவும் சி அட்டடவணை சொத்துக்கள் குமாரசாமி கவுண்டருக்கும் அவரது மகன் சின்னசாமிக்கும் ஒதுக்கப்பட்டு சி1 அட்டவணை சொத்துக்களை நஞ்சம்மாள் இறக்கும்வரை அனுபவம் செய்து வரவும் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் உண்மையல்ல.

iii) மேலும் வாதி நாச்சிமுத்து கவுண்டரின் மகன். ஏ மற்றும் ஏ1 அட்டவணை சொத்துக்களைப் பொறுத்து 11.10.1994 அன்று நாச்சிமுத்து கவுண்டர் செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தி வைத்துள்ளார் என்றும், அந்த சொத்துக்களுக்கு வாதி தான் உரிமையாளர் அதைப் பொறுத்து 06.06.2021 அன்று விடுதலை ஆவணம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது என்றும், 1 ம் பிரதிவாதிக்கு ஏக்கர் 0.93 ல் கிணற்றில் 1/3 பங்கும், போர்வெல்லில் 1/2 பங்கும், 3520 சதுரடி நிலமும் ஒதுக்கப்பட்டது, 2 ம் பிரதிவாதி புல எண்.102 ல் ஏக்கர் 0.32 ம் புல எண்.103/1 ல் ஏக்கர் 0.69 ம் கிரையம் பெற்றுள்ளார் என்றும், பின்னிட்டு 2 ம் பிரதிவாதி 06.02.2019 அன்று அதைப் பொறுத்து 1 ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றும், அதில் 1 ம் பிரதிவாதி வீடு கட்டியுள்ளார் என்றும், கடந்த 01.10.2020 அன்று கல்லாம்பாளையத்தை சேர்ந்த ராமமூர்த்தி என்பவரின் உதவியுடன் பொதுப்பாதையின் நடுவே சுவர் வைக்கப்பட்டது என்றும், அந்த இடத்தில் தாவா பாதையின் அகலம் 8 அடி மட்டுமே உள்ளது என்றும், சுப்பைய கவுண்டர் மற்றும் குமாரசாமி கவுண்டர் நிலங்களின் வழியாக செல்லும் தென்வடல் வண்டிப்பாதையில் மனுதாரர்களுக்கு பாத்தியம் உள்ளது என்றும், அதன் பகுதியான கிழமேல் வண்டிப்பாதை க.ச.எண்.102 மற்றும் 103/1 ல் அமைந்துள்ளது என்றும், குமாரசாமியின் வாரிசுகளும் 2 ம் எதிர்மனுதாரரும் அந்த 14 அடி வண்டிப்பாதையை வாதி அனுபவம் செய்வதை இடையூறு செய்து வருகிறார்கள் என்று சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் உண்மையல்ல.

iv) 3 ம் எதிர்மனுதாரரும், 1 ம் எதிர்மனுதாரரும் சகோதரர்கள், அவர்கள் சுப்பைய கவுண்டரின் வாரிசுகள் என்றும், 5 ம் எதிர்மனுதாரருக்கு க.ச.எண்.102 ல் உள்ள கிணற்றில் 1/2 பாகமும், தாவா 2 வது அயிட்ட சொத்தான

வண்டித்தடத்தில் தடபாத்தியமும் உள்ளது என்பதைப் பொறுத்து 6ம் எதிர்மனுதாரருக்கு எதுவும் தெரியாது என்றும், 5ம் எதிர்மனுதாரரின் மருமகன் தான் 6ம் எதிர்மனுதாரர் என்றும், 6ம் எதிர்மனுதாரர் 5ம் எதிர்மனுதாரர் வீட்டிலேயே தங்கி நிர்வகித்து வருகிறார் என்பது பொய் என்றும், மனுதாரரின் சொத்துக்களுக்கும் தாவா தடத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், எனவே இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்பதே எதிர் உரையின் சுருக்கமாகும்.

4) தற்போது இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? என்பதேயாகும்.

5) இரு தரப்பும் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டது. இரு தரப்பிலும் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை.

<u>6) தீர்வு:–</u>

7. சுப்பைய கவுண்டர் மற்றும் குமாரசாமி கவுண்டர் நிலங்களின் வழியாக செல்லும் தென்வடல் வண்டிப்பாதையில் மனுதாரர்களுக்கு பாத்தியம் உள்ளது என்றும், அதன் பகுதியான கிழமேல் வண்டிப்பாதை க.ச.எண்.102 மற்றும் 103/1ல் அமைந்துள்ளது என்றும், குமாரசாமியின் வாரிசுகளும் 2ம் எதிர்மனுதாரரும் அந்த 14 அடி வண்டிப்பாதையை வாதி அனுபவம் செய்வதை இடையூறு செய்து வருகிறார்கள் என்று சொல்லப்பட்டுள்ளது.

8. மனுதாரர் தரப்பில் 1956 பாகப்பிரிவினையின் அடிப்படையில் மனுதாரரின் தந்தைக்கு வடக்கு கிழக்கில் 50 அடியும், கிழக்கு மேற்கு மற்றும்

தென்வடலில் 16 அடியும் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும், அதில் மனுதாரரின் தகப்பனார் வடக்கு பார்க்க வீடு கட்டி வசித்து வருகிறார் என்றும், கடந்த 06.02.2019 ல் 1ம் எதிர்மனுதாரரால் 2ம் எதிர்மனுதாரருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைக்கப்பட்டுள்ளது என்றும், பின்பு 1ம் எதிர்மனுதாரர் 2ம் எதிர்மனுதாரருக்கு 09.10.2020 ல் க.ச.எண்.103/1ல் 0.48 சென்டை பொறுத்து செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றும், பின்னிட்டு 1, 2 எதிர்மனுதாரர்கள் அந்த சொத்தில் உள்ள கட்டிடத்தை இடித்துவிட்டு மனுதாரரின் தென்கிழக்கு சுவரை ஒட்டியுள்ள பகுதியில் குழிப்பறிக்க முயற்சி செய்து வருகிறார்கள் என்றும், அவ்வாறு குழி பறித்தால் மனுதாரரின் தென்பகுதி சுவர் கீழே விழுந்துவிடும் என்றும், மனுதாரர் வெள்ளையடிப்பதற்காக தென்புற சுவற்றிற்கு அப்பால் 2 அடி இடம் விட்டு சுவர் கட்டியுள்ளார் என்றும். எனவே தாவா சொத்தின் இயற்கை அமைப்புகளை பார்வையிட்டு தாலுக்கா சர்வேயர் உதவியுடன் அளந்து அறிக்கை தாக்கல் செய்தால் தான் மனுதாரர் அசல் வழக்கில் கோரியுள்ள செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் குறித்து உரிய முறையில் நீதிமன்றத்திற்கு தெளிவாக்க முடியும் என்றும், எனவே இம்மனுவை அனுமதித்து உத்தரவிட வேண்டும் என்று சொல்லப்பட்டு 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் இந்த மனுவிற்கு ஆட்சேபனை இல்லை என்று தெரிவிக்கப்பட்டு 5, 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது.

9. வழக்காவணங்களைப் பரிசீலிக்கும்போது அசல் வழக்கானது மனுதாரரால் தாவா சொத்துக்களைப் பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காகவும் தாவா 2வது அயிட்ட சொத்தில் பிரதிவாதிகள் ஏற்படுத்தியுள்ள தடைகளை நீக்கி தாவா சொத்தை பழைய நிலைக்கு கொண்டு வர வேண்டும் என்ற பரிகாரங்களுக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்காவணங்களை பரிசீலிக்கும்போது மனுதாரர்கள் தரப்பில் தாவா சொத்தை சர்வேயர் உதவியுடன் அளந்து அது குறித்து வரைபடம் மற்றும் அளவு வரைபடம் தாக்கல் செய்யப்படும் பட்சத்தில் தான் தாவா சொத்தை எதிர்மனுதாரர்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ள விவரம் குறித்து தெளிவாக்க முடியும் என்று சொல்லப்பட்டு எதிர்மனுதாரர்கள் தரப்பில் மறுக்கப்பட்டுள்ளது என்றும், அசல் வழக்கில் 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிரிடை கோரிக்கை மனுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

10. மனுதாரரால் அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காகவும் தாவா 2 வது அயிட்ட சொத்தில் பிரதிவாதிகள் ஏற்படுத்தியுள்ள தடைகளை நீக்கி தாவா சொத்தை பழைய நிலைக்கு கொண்டு வர வேண்டும் என்ற பரிகாரங்களுக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் தாவா சொத்துக்களின் இயற்கை அம்சங்களை பார்வையிட்டும் தாவா சொத்தை சர்வேயர் உதவியுடன் அளந்து அது குறித்து அறிக்கை தாக்கல் செய்யப்படும் பட்சத்தில் தாவா சொத்தின் இயற்கை அம்சம் குறித்தும் அதில் உள்ள ஆக்கிரமிப்பு குறித்தும் இந்நீதிமன்றத்திற்கு தெளிவுபடுத்த நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்வது அவசியமானது என்ற மனுதாரர்களின் வாதம் ஏற்புடைய வாதம் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

11. எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாவா சொத்துக்களை பார்வையிட்டு அளவீடு செய்து அறிக்கை தாக்கல் செய்ய உத்திரவு பிறப்பிக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்று சொல்லப்பட்டிருந்தாலும் நீதிமன்ற ஆணையர் தாவா சொத்துக்களை பார்வையிட்டு சர்வேயர் உதவியுடன் அளவீடு செய்து அதுசம்பந்தமாக அளவு வரைபடத்துடன் கூடிய அறிக்கை தாக்கல் செய்யும் பட்சத்தில் அது அசல் வழக்கில் சாட்சியத்தை குறைக்கவும், அசல் வழக்கை இறுதியாக தீர்மானிப்பதற்கு இந்நீதிமன்றத்திற்கு உதவிகரமாக அமையும் என

இந்நீதிமன்றம் தீர்மானித்து இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதார்களுக்கு எவ்வித கஷ்ட நஷ்டமும் ஏற்படப்போவதில்லை என்பதாலும் நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடத்திற்கு ஆட்சேபனை ஏதும் இருப்பின் அதனை பொறுத்து உபயதரப்பினர்கள் ஆட்சேபிக்க இயலும் என்பதாலும் இம்மனுவினை அனுமதித்து உத்திரவிடுவதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,**

இம்மனு அனுமதிக்கப்பட்டு, நீதிமன்ற ஆணையராக வழக்கறிஞர் திரு.M.மகேஷ், B.A.,B.L., M.S.No.226/2014 அவர்கள் நியமிக்கப்படுகிறார். நீதிமன்ற ஆணையர் மனு சொத்தின் இயற்கை அம்சங்களை பார்வையிட்டும் மனு சொத்தை சர்வேயர் உதவியுடன் அளவீடு செய்தும் அதில் ஆக்கிரமிப்பு ஏதேனும் உள்ளதா என்பதைப் பொறுத்தும் அதுகுறித்து அறிக்கையும், வரைபடமும், மற்றும் அளவு வரைபடமும் தாக்கல் செய்ய வேண்டும் என்றும், மேலும் மனு சொத்தினை பார்வையிடுவதற்கு முன்பு இரு தரப்பினர்களுக்கும் உரிய அறிவிப்புகள் கொடுக்க வேண்டும் என்றும் நீதிமன்ற ஆணையர் கட்டணமாக ரூ.12,000/−த்தை(ரூபாய் பன்னிரெண்டாயிரம் மட்டும்) மனுதாரர் நேரடியாக நீதிமன்ற ஆணையரிடம் செலுத்த வேண்டும் என்றும் உத்திரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் அறிக்கையும் வரைபடமும், அளவு வரைபடமும் தாக்கல் செய்ய மறு வாய்தா 10.06.2024

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2024−ம் ஆண்டு மார்ச் மாதம் 22 ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2024.03.22 19:10:40 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி(மு.கூ.பொ),**
**பல்லடம்.**

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2024.03.22 19:10:22 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி(மு.கூ.பொ),**
**பல்லடம்.**